# இலங்கையில் ஊடகவியல் கற்கைத்துறையை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள்: தமிழ் நிலைப்பட்ட ஒரு தேசிய நோக்கு

**Mr. S. Moses (1) and Mrs. Paheerathy Moses (2)**

(1) Sri Lanka Rupavahini Corporation, Colombo, Sri Lanka.

(2) Department of Social Sciences, Eastern University of Sri Lanka

(stanimoses@yahoo.com, rathyms@yahoo.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*ஊடகவியல் கல்வி என்பது சமூக அறிவியல், கலையியல், தொழில்நுட்பம் ஆகியவற்றுடனான மனித ஊடாட்டங்கள் கொண்டமைந்த தகவல் தொடர்பியல்சார் ஊடகங்களின் பன்முகப்பட்ட கல்வி முறையாகும். இது மக்கள் தொடர்பியல் சார்ந்த துறைகளான சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசறிவியல், மொழியியல், கல்வியியல், கலையியல், அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பான பல துறைகளுடனும் தொடர்புபட்ட கல்வித்துறையாகும். இலங்கையை பொறுத்த வரையில் சமீப காலங்களில் சிங்கள மொழியில் துரிதமான வளர்ச்சிநிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இருந்தபோதிலும் தமிழ்மொழியில் அவ்வாறில்லை. எமது நாட்டில் தரம் ஒன்பது தொடக்கம் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் வரை ஊடகவியல் கற்கைகள் கற்பிக்கப்படுகிறது. அதேபோன்று கலாநிதி பட்டத்திற்கான ஆய்வுகள் வரை காணப்படுகிறது. இருந்த போதிலும் தமிழ்மொழியில் இதனது வளர்ச்சிநிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. ஆகவே, இதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றினடிப்படையில் இதனை தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை எடுத்துக்கூறி பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து மட்டங்களிலும் இப்பாடத்துறையை முழுமையான வகையில் தமிழ்மொழி மூலமாக ஆரம்பித்து அதனை சீரிய முறையில் வளர்த்துச் செல்வதற்கான தீர்வுகளையும் சிபார்சுகளையும் முன்வைப்பதாகவே இந்த ஆய்வு அமைகிறது.*

***கலைச் சொற்கள்:*** *ஊடகவியல், தகவல், வளர்ச்சிநிலை, கல்வி*

**ஆய்வின் பின்னணி**

ஊடகவியல் கல்வி என்பது சமூக அறிவியல், கலையியல், தொழில்நுட்பம் ஆகியவற்றுடனான மனித ஊடாட்டங்கள் கொண்டமைந்த தகவல் தொடர்பியல்சார் ஊடகங்களின் பன்முகப்பட்ட கல்வி முறையாகும். இது மக்கள் தொடர்பியல் சார்ந்த துறைகளான சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசறிவியல், மொழியியல், கல்வியியல், கலையியல், அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பான பல துறைகளுடனும் தொடர்புபட்ட கல்வித்துறையாகும். இத்துறைகளில் காணப்படும் தகவல் தொடர்பியல் தொடர்பான விடயங்களைப்பற்றி பல அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள போதிலும் தகவல் தொடர்பியல் என்பதனை தனியொரு துறையாக்கி அதற்கென தனியொரு இடத்தினை உருவாக்கியவர் 'வில்பர் ஸ்ரேம்' எனும் அறிஞரேயாவார். எனவே இவரே ஊடகக்கல்வியின் தந்தை எனவும் சொல்லப்படுகிறார். அவரைத்தொடர்ந்து தகவல் தொடர்பியல் கல்வியில் தொடக்க காலத்தில் போல் லாசர் பெல்ட் (Paul Lazars Feld), குர்த் லெவின் (Kurt Lewin), ஹரோல்ட் லாஸ்வெல் (Hurold Lasswell), கால் ஹொவ்லான்ட் (Carl Hovland) போன்றோர் ஆர்வம் காட்டியுள்ளதோடு தகவல் தொடர்பு குறித்து ஆய்வுகளையும் செய்துள்ளனர்.

இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காலகட்டத்தில் தகவல் தொடர்பியல் சிறந்ததொரு துறையாக உருவெடுத்தது. இது தொடர்பான கல்வி முறையிலும் இக்காலப்பகுதியில் பலர் ஈடுபடத்தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சார்ல்ஸ் டார்வின் (Charles Darwin), சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud), கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆகியோரின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தகவல் தொடர்பியல் துறையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்தான் தகவல் தொடர்பியல் துறை முழுமையாக வளர்ச்சி பெற்ற துறையாக பரிணமித்தது. இக்கால கட்டத்தில் உலகின் பல நாடுகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் தகவல் தொடர்பியல் பற்றிய ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவில் தகவல் தொடர்பியல் கற்கைத்துறை இல்லாத பல்கலைக்கழகங்கள் இல்லை எனும் அளவுக்கு தகவல் தொடர்பியலின் வளர்ச்சி காணப்பட்டது. அதேபோன்று பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து போன்ற பிற நாடுகளிலும் ஊடகக்கலையின் வளர்ச்சியால் தகவல் தொடர்பியல் கல்வி சிறப்பிடம் பெற்றது.

இந்தியாவிலும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், அந்நாட்டின் பல பல்கலைக்கழகங்களிலும் பிற கல்வி நிலையங்களிலும் ஊடகக்கலையின் அதிவேக வளர்ச்சியால் தகவல் தொடர்பியல் கல்வி சிறப்பிடம் பெறத்தொடங்கியது.

இலங்கையை பொறுத்த வரையில் இதன் வளர்ச்சிநிலை மிகவும் பின்தங்கியதாகவே காணப்படுகிறது. ஆனாலும் சமீப காலங்களில் சிங்கள மொழியில் துரிதமான வளர்ச்சிநிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. தமிழ்மொழியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

எமது நாட்டில் தரம் ஒன்பது தொடக்கம் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் வரை ஊடகவியல் கற்கைகள் கற்பிக்கப்படுகிறது. அதேபோன்று கலாநிதி பட்டத்திற்கான ஆய்வுகள் வரை காணப்படுகிறது. இருந்த போதிலும் தமிழ்மொழியில் இதனது வளர்ச்சிநிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. ஆகவே, இதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றினடிப்படையில் இதனை தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை எடுத்துக்கூறி பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து மட்டங்களிலும் இப்பாடத்துறையை முழுமையான வகையில் தமிழ்மொழி மூலமாக ஆரம்பித்து அதனை சீரிய முறையில் வளர்த்துச் செல்வதற்கான தீர்வுகளையும் சிபார்சுகளையும் முன்வைப்பதாகவே இந்த ஆய்வு அமைகிறது.

**ஆய்வின் முறையியல்**

நான் அறிந்த வரையில் இலங்கையில் தமிழ் ஊடகவியல் கல்வி தொடர்பாக தமிழில் இதுவரை யாருமே பூரணமானதொரு ஆய்வினை செய்யாததன் காரணமாக எமது இந்த ஆய்வானது முன்னிலை ஆய்வாகவும் (Preliminary Survey) இலங்கை தமிழ் ஊடகவியல் கல்வி குறித்த விளக்க ஆய்வாகவும் (Descriptive Study) அமைகிறது.

ஆய்வுக்காக எம்மால் மையப்படுத்தப்பட்ட விடயங்களுக்கேற்ப தரரீதியான ஆய்வு (Qualitative Research) தொகைரீதியான ஆய்வு (Quantitative Research) ஆகிய இரு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றினூடாக முதனிலைத்தரவுகள் (Primary data), இரண்டாம் நிலைத்தரவுகள் (Secondary data) ஆகிய இருவகையிலும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முதனிலைத் தரவுகளாக நேர்காணல், அவதானித்தல், கலந்துரையாடல், வினாக்கொத்து போன்றவை பயன்னபடுத்தப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தமிழ்மொழியில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டத்தினர், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களிலிருந்தும் பெறப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பதிவேடுகள், புள்ளிவிபரங்கள், கட்டுரைகள், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஊடகவியல் கல்வியின் தமிழ் மொழியிலான முன்னெடுப்பில் காணப்படும் சிக்கல்களை கண்டறிந்து இலங்கையில் ஊடகவியல் கல்வியின் போக்கு, தமிழில் ஊடகவியல் கல்வியின் நிலை என்பவற்றை வரன்முறைரீதியில் எடுத்துரைத்து, அவற்றினூடாக தமிழ்நிலைப்பட்ட ஊடகவியல் கல்வித்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சிக்கல்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக இப்பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் எடுத்துக்கூறப்பட்டு பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து மட்டங்களிலும் இப்பாடத்துறையை முழுமையான வகையில் தமிழ்மொழி மூலமாக ஆரம்பித்து அதனை சீரிய முறையில் வளர்த்துச் செல்வதற்கான தீர்வுகளும் சிபார்சுகளும் முன்வைக்கப் பட்டுள்ளன.

**முடிவுகளும் விதந்துரைப்பும்**

**1. இலங்கையில் ஊடகவியல் கல்வியின் வளர்ச்சி**

பல்கலைக்கழகம் மற்றும் சில தனியார் நிறுவனங்களினூடாக ஊடகக்கல்வி இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவை பட்டயம், பட்டம், முதுநிலை மற்றும் கலாநிதி பட்ட ஆய்வுகள் என பல நிலைகளில் காணப்படுகின்றன. அவை பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சிங்கள மொழித்துறையில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கென வார இறுதி நாட்களில் ஒரு வருட கால பட்டயக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் சிங்கள மொழியில் மாத்திரம் பட்டதாரி மாணவர்களுக்கு பொதுப்பாடங்களில் ஒன்றாக ஊடகவியல் கல்வி ஆரம்பிக்கப்பட்டு அதன்பின்னர் விசேட பட்டத்திற்கான பாடத்துறையாக சிங்களத்தில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிறிபாளி வளாகத்தினூடாக வெகுஜன ஊடகம் என்ற தலைப்பில் ஊடகக்கற்கைகள் இளநிலை பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. 2012ம் வருடம் முதல் முதுமாணி தொடங்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தில் சமூககற்கைகள் பீடத்தின் நுண்கலை துறையினூடாக ஊடகக்கல்வி பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஒன்பது வருடங்களாக

முதுகலைமாணி கற்கை நெறியையும் ஊடகவியலில் மேற்கொண்டு வருகின்றது.

சிறி ஜயவர்த்தன பல்கலைக்கழகம் தொடர்பாடலும் சிங்கள மொழியும் என்ற துறையினூடாக ஊடகவியல் சார்ந்த சிறப்புக் கற்கைநெறியை பட்டதாரி மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றது. பட்டப்பின்படிப்பு பீடத்தினூடாக முதுமாணி, முதுதத்துவமாணி, முனைவர் பட்டங்களுக்கான கற்கைநெறிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக கற்கைகள் பீடத்தினூடாக இளநிலை பொதுப்பட்டதாரி மாணவர்களுக்கு தொடர்பாடல் கற்கைநெறிகள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒன்பது வருடங்களாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் இலங்கை இதழியல் கல்லூரி ஒரு வருடகால முழுநேர மூன்று மொழியிலுமான பட்டயக் கற்கைநெறிகளை வழங்கிவருகிறது. ஊடக தொழின்மையர்களுக்காக குறுகியகால கருத்தரங்குகளையும் நடத்திவருகிறது.

க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர வகுப்புகளில் சிங்கள மொழி மூலமாக இப்பாடத்துறை அதிகமான பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. க.பொ.த. (சா.த.) மூன்றாம் பாடத்தொகுதிக்குள் 87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் (Communication & Media Studies) க.பொ.த. (உ.த.) 29 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் (Communication & Media Studies) போதிக்கப்பட்டு வருகின்றன.

## 2. தமிழில் ஊடகவியல் கல்வியின் முன்னெடுப்பு

ஊடகக்கல்வியானது தமிழ் மொழி மூலமாக இலங்கையின் சில பல்கலைக்கழகங்களிலும் சில தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கப்பட்டு வருவதுடன் இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களின் தொலைதூர இலங்கை கற்கை நிலையங்களினூடாகவும் முதுகலைமாணி கற்கைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நாம் கூறியது போல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தமிழ்மொழி மூலமாக ஒரு வருட காலத்தையுடைய பகுதிநேர பட்டயக்கல்வி நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் படித்து பயனடைந்துள்ளார்கள். தற்பொழுதும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இக்கற்கைநெறி தொடர்கிறது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் தமிழ்மொழி மூலமாக பட்டய கற்கைநெறிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. ஆனால் இரு வருட காலத்திலேயே அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஊடக வள பயிற்சிகள் இல்லம் தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கான ஊடக கற்கைகளையும் பயிற்சிகளையும் 2003ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து வழங்கி வருகிறது. தற்பொழுது இரு வருட கால முழுநேர பட்டயக்கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் வெகுஜன ஊடகக்கற்கைகள் (Media Studies) கற்பிக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது சிறுதொகை மாணவர்கள் விசேடகற்கையை மேற்கொண்டு வருகிறார்கள். முதல் இரு தொகுதி மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறியுள்ளார்கள்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு வருடகால பட்டயக்கற்கைநெறி நடாத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. தற்பொழுது அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2009ம் ஆண்டில் கலை கலாசார பீடத்தின் புறநிலைக்கற்கைகள் பிரிவினூடாக மூன்று மாத கால ஊடகவியல் சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இரு தொகுதி மாணவர்கள் கற்று வெளியேறியுள்ளனர். தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இலங்கை இதழியல் கல்லூரியில் ஒருவருட கால முழுநேர பட்டயக் கற்கைநெறி தமிழ்மொழி மூலமும் நடாத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை.

இந்திய தமிழ்நாட்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தால் நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளில் ஒன்றாக 'தொடர்பாடலும் ஊடகவியலும்' முதுகலைமாணி கற்கை நெறியையும், பட்டப்பின் பட்டயக்கல்வியையும் இலங்கையில் தமது நிலையத்தின் ஊடாக நடாத்தி வருகிறது. இதுமட்டுமே இலங்கையில் தமிழ்மொழி மூலமாக நடாத்தப்பட்டுவரும் ஒரேயொரு ஊடகவியல் சார்ந்த பட்டப்பின் கற்கைநெறி என்பது குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடியதாகும். இந்த கற்கைநெறி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சில தனியார் கல்வி நிலையங்களிலும் ஊடகவியல் தொடர்பான கற்கைநெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் அதிகமானவை கல்வித் தரமற்றவர்களாலும் வியாபார நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரிகின்றது. இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் 'விசப் சவுந்தரம்

ஊடக நிலையம்', கிழக்கில் 'எழுகுரல் ஊடக மையம்', மட்டக்களப்பில் 'KIAMS ஊடகக் கற்கைகள் நிலையம்' போன்றவை பொறுப்புணர்வோடு வெகுஜன ஊடகம் சார்ந்த கற்கைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

**3. தமிழ் மொழியிலான முன்னெடுப்பில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள்**

இலங்கையில் தமிழ் மொழியிலான ஊடகவியல் கல்வியின் வளர்ச்சிப்போக்கை ஏனைய கல்வித்துறைகளுடனும், சிங்கள மொழியிலான ஊடகவியல் கல்வியின் வளர்ச்சிப்போக்குடனும் ஒப்பிட்டு நோக்கும் போது தமிழ் மொழியிலான ஊடகவியல் கல்வியின் நிலை மிகமிக பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக, தமிழ் மொழியிலான பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இப்பாடத்துறை சார்ந்து தமிழ் மொழி மூலமாக முறையான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அரச மற்றும் அரசசார்பற்ற துறைகள், பெற்றோர் மற்றும் சமூகநிலையினர், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், தமிழ் மொழி சார்ந்த அரசியல் பிரமுகர்கள் தங்களது நிலைகளில் இப்பாடத்துறையின் வளர்ச்சிக்கு பூரண பங்களிப்பு வழங்கவில்லை. உலகளவில் தனிப்பெருந்துறையாக பரிணமித்து ஆழமான வளர்ச்சியினை எய்து கொண்டிருக்கும் ஊடகவியல்துறை சார்ந்த கல்விமுறைகளும் ஆய்வுகளும் இலங்கையில் தமிழ் மொழியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு பல்வேறுபட்ட அகம் மற்றும் புறக் காரணங்கள் ஏதுவாக அமைந்துள்ளதனையும் காணமுடிகிறது.

**4. சிக்கல்களுக்கான பிரதான காரணங்கள்**

புதிதாக வளர்ச்சியடைந்து வரும் துறை என்பதால் போதிய வளவாளர்கள் இல்லை.

இத்துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் இல்லாமை.

இத்துறை சார்ந்த கல்விச் செயற்பாடுகளில் தமிழ் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போதிய ஆர்வம் காட்டாமை.

புதிய கல்வித்துறைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் ஆரம்பிக்கக்கூடாது, வளர்ச்சியடைய விடக்கூடாது என்ற ஏனைய துறைசார்ந்த சில விரிவுரையாளர்கள், ஆசிரியர்களின் காழ்ப்புணர்ச்சி.

இக்கல்வித்துறையின் சமூக, பொருளாதார முக்கியத்துவம் உணரப்படாமை.

இத்துறைசார்ந்த தெளிவின்மை அல்லது பிழையான கருத்தாக்கம்.

ஏனைய துறைகளைவிட மிகவும் அர்ப்பணிப்புடனும் சமூக அறத்துடனும் எதிர்காலத்தில் பணியாற்ற வேண்டும் என்ற பயம்.

இவை களையப்பட வேண்டும்.

**முன்மொழிவுகள்**

பிரதான மொழியாக தமிழில் கற்பிக்கும் இலங்கை பல்கலைக்கழகங்களில் இப்பாடம் பட்டப்படிப்புக்கான விசேட பாடநெறியாக மட்டுமின்றி பட்டப்பின்படிப்பு மற்றும் ஆய்வுத்துறையாகவும் தமிழில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதனூடாக இத்துறைசார்ந்த வளவாளர்கள் பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டங்களில் உருவாக்கப்பட வேண்டும்.

எம்மத்தியில் உள்ள எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இத்துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை வெளிக்கொண்டுவர வேண்டும். இதற்கு வெளியீட்டு நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இத்துறை சார்ந்த கல்விச் செயற்பாடுகளில் தமிழ் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போதிய ஆர்வம் காட்ட வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒருசில பாடசாலைகளில் மட்டுமே கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஊடகவியல் அல்லது வெகுஜன தொடர்பாடல் கற்கைத்துறை அனைத்து தமிழ் பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் இப்பாடத்தில் துரித கவனமெடுத்து செயற்பட வேண்டும்.

புதிய கல்வித்துறைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் ஆரம்பிக்கக்கூடாது, இதனை வளர்ச்சியடைய விடக்கூடாது என்ற ஏனைய துறைசார்ந்த சில விரிவுரையாளர்கள், ஆசிரியர்களின் காழ்ப்புணர்ச்சி களையப்பட வேண்டும். பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை தவிர்த்து இப்பாடத்துறை ஆரம்பிக்கப்படவும் வளர்ச்சி பெறவும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இக்கல்வித்துறையின் சமூக, பொருளாதார முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். இத்துறையின் சமூக பொருளாதார நன்மைகள் பற்றிய கருத்துக்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படவேண்டும். பெற்றோர் மற்றும் ஒவ்வொரு சமூகநிலையினரும் இவ்விடயத்தில் கூடிய சிரத்தை எடுத்து இத்துறை சார்ந்த கல்வி விடயங்களை தமிழ் சமூகத்தில் முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இத்துறைசார்ந்த தெளிவின்மை அல்லது பிழையான கருத்தாக்கம் திருத்தியமைக்கப்பட வேண்டும். உயிர் ஆபத்து ஏற்படுவதை தவிர்க்க முடியும். இது

கல்வித்துறை மட்டுமல்ல தொழில்முறை சார்ந்த உயர் துறையுமாகும் என்பதை மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனைய துறைகளைவிட மிகவும் அர்ப்பணிப்புடனும் சமூக அறத்துடனும் பணியாற்ற வேண்டும் என்ற பயம் அவசியமில்லை. ஏனெனில் இது சமூகத்தை நெறிப்படுத்தும் நெறியாளர்களைக் கொண்டதாகும். ஆகவே இவர்கள் சமூகத்தில் மதிப்புடையவர்களாகவும் சமூக சிந்தனை மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

அரச மற்றும் அரசசார்பற்ற துறைகள் அனைத்தும் ஊடகத்துறைசார் தமிழ் மொழியிலான கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைத்து கல்வித்துறைசார் பூரணத்துவம் பெற ஆதரவு வழங்க வேண்டும். தமிழ் மொழி சார்ந்த அரசியல் பிரமுகர்கள் இக்கல்வித்துறையின் அவசியம் மற்றும் பயன்பாடு கருதி இதனது வளர்ச்சிக்காக பொறுப்புடன் பணியாற்ற வேண்டும்.

பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களின் தொழில் மேம்பாடு கருதி இப்பல்கலைக்கழகங்களில் பயிற்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ் மொழியிலான ஊடகவியல்துறை சார்ந்த கல்விமுறைகளும் ஆய்வுகளும் இலங்கையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கு ஏதுவான ஏனைய புறக்காரணங்களும் களையப்பட வேண்டும்.

**ஆய்வின் பயன்பாடு**

இந்த ஆய்வினூடாக ஊடகவியல் கல்வித்துறை தமிழில் வளர்ச்சி பெறும். மட்டுமின்றி இத்துறை சார்ந்த ஆய்வுகளுக்கு உறுதுணையாகவும் அமையும்.

ஊடகவியல் பாடத்தை கற்பதனால் பெறும் நன்மைகள் வெளிப்படுத்தப்படும். இத்துறை சார்ந்த அபிப்பிராய பேதங்கள் களையப்படும்.

ஊடகவியல் கற்கைத்துறை தமிழில் ஆரம்பிக்கப்படாமலிருக்கும் இலங்கையின் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் தமிழில் ஆரம்பிக்கப்படும் என நம்பலாம்.

ஊடகவியல் துறையில் கல்வி கற்கும் மாணவன் மிகவிரைவாக தொழில்வாய்ப்பை பெறமுடியும். அதுமட்டுமின்றி சுயமாகவும் ஊடகவியல் சார்ந்த தொழிலில் பிரதேச, தேசிய, சர்வதேச மட்டங்களில் தொழிலை பெற முடியும் என்ற தெளிவை ஏற்படுத்தும்.

தமிழ்ச் சூழலில் ஊடகத்துறைசார்ந்து பணிபுரிவோருக்கு சிறந்த பயிற்சிகளும் வாய்ப்புகளும் ஏற்பட வழிவகுக்கும். இதற்கு ஊடகவியல் தொடர்பான கல்விமுறை முக்கியமான பங்களிப்பை வழங்கும்.

**முடிவுரை**

தொழில்முறை கல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் உலக கல்வியியலில் இத்துறைசார்ந்த கல்வி நடவடிக்கைகள் பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டங்களில் சுயமொழியில் முன்னெடுக்கப்படும் போது அச்செயலானது குறித்த சமூகம்சார்ந்த முன்னேற்றகரமான செயன்முறையாகவே கருதப்படும்.

ஊடகப்பணியில் ஈடுபடுகின்ற அனைவரும் ஊடகவியல் தொடர்பான அறிவினை பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், தொடர்பு சாதனத் துறையானது தனித்திறமும் பயிற்சியும் தேவைப்படும் தொழிற் துறையாகிவிட்டது. எந்தவொரு துறையும் திறம்பட அமையவேண்டும் அல்லது செயற்பட வேண்டுமானால் துறைசார்ந்த செயற்பாடும் தேவைப்படுவதோடு சிறப்பாக பணிபுரிய விரும்புவோர் தத்தமது ஆற்றல்களை உரியவாறு வளர்துக்கொள்ளவும் வேண்டும்.

அனுபவ அறிவுகளோடு செயற்படுவதற்கு அப்பால் படிப்பறிவோடும் பயிற்சியோடும் செயற்பட புறப்படும் போது அதிக முன்னேற்றத்தை அடையலாம். ஏனெனில், சகல திறன்களும் படிப்பறிவு அல்லது கற்றுக்கொள்வதன் மூலமாகத்தான் வளர்கிறது. சரிவரக் கற்றக்கொள்ளாமல் எதையுமே சரிவரச் செய்யமுடியாது.

தகவல் தொடர்பு ஊடக கலாசாரத்தை ஆழமாகவும் நிதானமாகவும் உலகளாவிய ரீதியில் உருவாக்க படிப்பறிவு அவசியம். அதனால் தொடர்பு சாதனத்துறையினர் இது தொடர்பான கல்வி, பயில்திறம், செயற்திறன், பயிற்சி தொழில் ஆளுமை போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய யுகத்தில் மனித செயற்பாடுகள் ஊடகங்களின் வழியாகவே முன்னேற்றமடைகின்றது. இது தமிழுக்கும் பொருந்தும். இதனை பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடைய "இன்று தமிழின் வியாப்தி ஊடகங்கள் வழியாகவே நிகழ்கின்றது" என்ற கூற்று மெய்த்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**

1) மோசேஸ், எஸ். (2007). வெகுஜன ஊடகம்: இலங்கை. கிருஷி வெளியீடு.
2) மோசேஸ், எஸ். (2007). தொழில்நுட்ப கலைகள்: இலங்கை. கிருஷி வெளியீடு.
3) பகீரதி, எம். (2010). இலங்கையில் தொலைக்காட்சி: இலங்கை. கிருஷி வெளியீடு.
4) Braham, Tesser. (1995). Advanced Social Psychology: Boston University. McGraw Hi